# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# S.T.C. No.292/2025 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முகமது அப்பாஸ் | த-பெ | ரசாக் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 21/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ஜவுளி கடை வேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.10.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

1) நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து அய்யப்பா ஜவுளி கடையில் வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் வருடம் நினைவில் இல்லை. நான் 10 ம் வகுப்பு படித்து கொண்டிருந்தபோது சைக்கிளில் டூசன் சென்று விட்டு வீட்டிற்கு இரவு 8.30 மணியளவில் காரைக்குடி கல்லூரி சாலை வைரம் மெடிக்கல் அருகில் சென்று கொண்டிருந்தேன். இடது புறமாக ஓரமாக சம்பவ சாலையில் சென்று கொண்டிருந்தேன். அப்போது என்ன நடந்தது என்று நியாபகம் இல்லை. எனது அம்மாவிடம் இருந்து தான் தெரிந்து கொண்டேன். எனது அம்மாவிடம் கேட்டதற்கு வேகமாக பேருந்து ஒன்று வந்து என் மீது மோதி விட்டதாக சொன்னார்கள். எந்த மருத்துவமனையில் இருந்தேன் என்று நினைவில் இல்லை. எனது தாயார் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்ற விபரம் எனக்கு தெரியாது நான் மயக்கத்தில் இருந்தேன். பேருந்தை ஓட்டியவர் எந்த ஊர் என்ற விபரம் தெரியாது. எல்லா விபரங்களையும் மறந்து விட்டேன்.

குறுக்கு விசாரணை

1) சம்பவம் குறித்து எனக்கு நியாபகம் இல்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.15 15:01:52 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# S.T.C. No.292/2025 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முகமது பாரூக் பாட்ஷா | த-பெ | தாவுத் பாட்ஷா |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 34/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | மரக்கடை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.10.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

1) நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து மரக்கடை வைத்துள்ளேன். அசா1 ஐ தெரியும். கடந்த 25.10.2018 அன்று வைரம் மெடிக்கலில் இரவு 8.30 மணியளவில் நான் மருந்து வாங்கி கொண்டிருந்தேன். அப்பாஸ் என்பவர் சைக்கிளில் டீசன் முடித்து கொண்டு செக்காலை சாலை வழியாக சென்று கொண்டிருந்தார். அப்போது சம்பவ சாலையில் கூட்டம் கூடிவிட்டது. அமானுலா என்பவர் அந்த கூட்டத்தில் இருந்தார். பேருந்து ஒன்று சம்பவ சாலையில் வேகமாக வந்து சைக்கிளில் சென்று கொண்டிருந்த அந்த பையன் மீது மோதியதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். சம்பவ இடத்திற்கு சென்று அந்த பையனை தூக்கி பார்த்தபோது கை, கால் ஆகிய பகுதிகளில் சிராய்ப்பு காயங்களும் பின் தலையில் வீக்கம் இருந்தது. மேலும் அவர் மயக்க நிலைக்கு சென்று விட்டார். அவருக்கு தண்ணீர் தெளித்து பார்த்தபோது அவருக்கு நினைவு இல்லை. பின்னர் அங்கிருந்தவர்களுடன் காரைக்குடியில் உள்ள காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். விபரம் தெரிந்து அவரது அம்மா, அப்பா ஆகியோர் அங்கு வந்தார்கள். மேல் சிகிச்சைக்காக அவரை வேலம்மாள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் அசா1 மூலமாக மேற்படி விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர் இராமநாதபுரத்தை சேர்ந்த கணபதி என்று தெரிந்து கொண்டேன். சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) விபத்து நடந்து கூட்டமாக வந்தவுடன் தான் நான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். மற்றபடி பேருந்தின் ஓட்டுநர் பெயர் அசா1 சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நிறைய கடைகள் மற்றும் ஜன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். மேற்படி சிறுவனுடன் வேறு யாரும் டீசன் படித்து விட்டு வந்தார்களா என்றால் அன்று அவர் மட்டும் தான் வந்தார். மற்ற நாட்களில் சேர்ந்து வருவார்கள்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.15 15:01:57 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
S.T.C. No.292/2025 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஆசியம்மாள் | க-பெ | ரசாக் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 42/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டு வேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.10.2025

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1) நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வீட்டு வேலை செய்து வருகிறேன். எனது மகன் முகமது அப்பாஸ் 10 ம் வகுப்பு எஸ்.எம்.எஸ் பள்ளியில் 2018 ம் வருடம் பயின்று வந்தார். பள்ளிக்கு பொதுவாக சைக்கிளில் செல்வார். 25.10.2018 அன்று எனது மகன் முகமது அப்பாஸ் டூசன் சென்று விட்டு இரவு 8.45 மணிக்கு அதே சைக்கிளில் வீட்டு திரும்பி கொண்டிருந்தார். காரைக்குடி வைரம் மெடிக்கல் அருகில் சைக்கிளில் எனது மகன் வந்து கொண்டிருந்தபோது சம்பவ சாலையில் வந்த இராமநாதபுரம் - இராமேஸ்வரம் வழிதடத்தில் இயங்கி வந்த பேருந்து நிதானம் இன்றி வந்து எனது மகன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக எங்களுக்கு தெரிந்த அமானுலா என்பவர் இந்த தகவலை என்னிடம் சொன்னார். நான் உடனே வைரம் மெடிக்கல் சாலை சென்று பார்த்தபோது எனது மகன் சுயநினைவின்றி மயக்கமாக இருந்தார். அவருக்கு பின் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. அங்கியிருந்த ஆட்டோவில் காவேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன்.

2) ஸ்கேன் மருத்துவ பரிசோதனை செய்த மருத்துவர்கள் மேல் சிகிச்சைகாக வேலம்மாள் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். ஆம்புலன்ஸ் உதவியுடன் வேலம்மாள் மருத்துவமனைக்கு என் மகனை சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதாக அங்கிருந்தவர்கள் சொன்னார். தீவிர சிகிச்சை பிரிவில் 10 நாட்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனது மகன் கோமாக்கு சென்று விட்டதாக மருத்துவர் சொன்னார். 10 நாட்களுக்கு பின்பு சுயநினைவிற்கு திரும்பினார். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது அந்த பேருந்தின் ஓட்டுநர் ஓடிவிட்டார். அங்கிருந்தவர்களை விசாரித்தபோது மேற்படி நபர் கணபதி

என்று தெரிந்து கொண்டேன். விபத்து ஏற்படுத்திய நபர் மீது நடவடிக்கை எடுக்குமாறு நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

1) புகாரை எழுதியது யார் என்றால் நான் தான் எழுதினேன். பேருந்தின் ஓட்டுநர் பெயரை யார் மூலமாக தெரிந்து கொண்டேன் என்றால் அமானுலா என்பவர் விசாரணை செய்து சொன்னதன் அடிப்படையில் எனக்கு தெரியும். அமானுலா எனக்கு தெரிந்தவர் என்று முதல் விசாரணையில் சொல்லிவிட்டு புகாரில் அமானுலா எனக்கு உறவினர் என்று இருந்தால் சரிதான். புகாரை எப்போது எங்கு யாரிடம் கொடுத்தேன் என்றால் புகார் சம்பவத்திற்கு மறுநாள் நேரம் நினைவில் இல்லை கொடுத்தேன். சம்பவ இடமானது ஜனநடமாட்டம் உள்ள அதிக கடைகள் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் சென்றபோது அங்கு கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். பாரூக் பாட்ஷா, முகமது ரியாஸ் ஆகியோர்கள் எங்களின் உறவினர் என்றால் சரிதான். முகமது ரியாஸ் சம்பவத்தை கேள்வி பட்டு சம்பவ இடத்திற்கு வந்து விட்டார் என்றால் சரிதான்.

2) பாரூக் பாட்ஷா என்பவர் சம்பவ இடத்தில் இருந்த மருந்து கடையில் மருந்து வாங்கிக்கொண்டிருந்தார் அவர் தான் அமானுலாவிற்கு போன் செய்து தகவல் சொல்லியிருக்கிறார் பின்பு அமானுலா எனக்கு போன் செய்தார். அந்த இடத்தில் சுமார் 10 நபர்களுக்கு மேல் இருந்தார்கள். நான் புகாரில் மேற்படி நபர்களுக்கு சம்பவம் தெரியும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நடந்த சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.15 15:02:06 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி